தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

அரசு உறுதிமொழிக் குழு

(1995 - 96)



(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

முப்பத்து ஒன்றாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை–600 009

53-387—A

பொருளடக்கம்.

பக்கங்கள்.

குழுவின் அமைப்பு .. iii

அறிக்கை.

(i) முகவுரை .. v

(ii) குழுவின் கூட்டங்கள் .. v

(iii) பொதுக் குறிப்புரை .. vi

இணைப்புகள்.

1. 1995-96 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் துறை வாரியான விவரம் .. 1—19

2. அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப் பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல் .. 20

3. நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான மற்றும் ஆண்டு வாரியான பட்டியல் .. 21—22

4. குழு கூடிய நாட்கள பற்றிய விவரம் .. 23

5. நிறைவேற்றப் பெற்ற / படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதி மொழிகளின் சதவிதம் .. 24

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1995-96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு.

(20-6-1995 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது).

தலைவர் :

1. திரு. ஆர். சிங்காரம்

உறுப்பினர்கள் :

2. திரு. ஆ. கப்புரத்தினம்
3. திரு. சிங்கை கோவிந்தராசு
4. திரு. க. பழனிசாமி
5. திரு. என். ஆர். சிவபதி
6. திரு. ஏ.டி. செல்லச்சாமி
7. திரு. ஜெ. பன்னீர்செல்வம்
8. திரு. வே. பெரியசாமி
9. டாக்டர் ச. சுந்தரராஜ்
10. திரு. ஆ. பாலையா
11. திரு. ஏ. தெய்வநாயகம்
12. திரு. எஸ்.எஸ். ராமகப்பு

செயலகம் :

திரு. செ.சு. ஜானகிராமன், செயலாளர்.

திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர், கூடுதல் செயலாளர்.

திருமதி. பாலுமதி ஆனந்தராஜன், துணைச் செயலாளர்.

திருமதி. நா. துளசிபாய், சார்புச் செயலாளர்.

அரசு உறுதிமொழிக் குழு

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

மூப்பத்து ஒன்றாவது அறிக்கை.

பெறுநர் :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை.

(i) முகவுரை.

1. 1995–96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) மூப்பத்து ஒன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 248 (1) ஆம் விதியின் கீழ் 1995–96 ஆம் ஆண்டிற்கான குழு 1995 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20 ஆம் நாளன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றது.

(ii) குழுவின் கூட்டங்கள்.

3. குழு, சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள பற்றிய விவரம் இணைப்பு (4)-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

4. பேரவையில் அமைச்சர்களால் கொடுக்கப்பெற்று, ஏற்கனவே, நிலுவையாக உள்ள உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை குழு மேற்படி கூட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. நிறை வேற்றப்பெறாத உறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட அதிகாரி களை நேரில் சந்தித்து விவரங்களைச் சேகரித்தது. மேலும் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசுச் செயலாளர்களை நேரில் சந்தித்து உறுதிமொழிகள் குறித்து கலந்துரையாடியது. நிறைவேற்றப் பெற்றவையாக குழுவினால் கருதப் பட்ட உறுதிமொழிகள் பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. இவ்வறிக்கையில் புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், சென்னை மற்றும் செங்கல்பட்டு–எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்கள் குறித்த உறுதிமொழிகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(iii) பொதுக் குறிப்புரைகள்.

6. பேரவையில் அளிக்கப்படும் உறுதிமொழிகளின் மீது குறிப்பிட்ட கால அள விற்குள் நடவடிக்கைகள் முற்றுப்பெற வேண்டும் என்பதை குழு வலியுறுத்துகிறது.

7. குழுவின் இந்த அறிக்கைக்கு 1995 ஆம் ஆண்டு நவம்பர் 7 ஆம் நாள் நடை பெற்ற கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை-600 009,
7–11–1995,
ஐப்பசி 21, யுவ,
திருவள்ளுவர் ஆண்டு–2027.

ஆர். சிங்காரம்,
தலைவர்.

இணைப்பு 1.

1995-96 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பெற்றனவாக முடிவு செய்யப்பட்ட உறுதிமொழிகள் குறித்த துறை வாரியான விவரம்

புதுக்கோட்டை மாவட்டம்.

பொதுப்பணித்துறை.

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை
(1)	(2)	(3)	(4)	(5)
1	110/94	உடுக்குறியிட்ட வினா எண். 16276, திரு. எஸ். சண்முக நாதன், எம். எல். ஏ., 25—3—1994.	புதுக்கோட்டையிலிருந்து மணிப்பள்ளம் வழியாக ஆலங்குடிக்கு செல்லும் சாலையை செப்பனிட அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	இந்த சாலையின் சரியான பெயர் மணிப்பள்ளம் சாலை என்பதாகும். இது ஒரு இதர மாவட்டச் சாலையாகும். இதில் மொத்த தூரம் 19.8 கி.மீ. (0/4 2/2). இச்சாலை தார் தளம் கொண்டதாகும். இச்சாலை நடப்பு ஆண்டில் கி. மீ. 8/0—10/0, 13/0—14/0 வரை ரூ. 3.50 இலட்சம் செலவில் தொழிற் சாலை இல்லாத பகுதிகளில் உள்ள பழு தடைந்த சாலைகள் பழுது பார்க்கும் திட்டத்தின் கீழ் பழுது பார்க்கப்பட்டு வருகிறது.
2	234/94	உடுக்குறியிடாத வினா எண். 16122, திரு. எஸ். சண்முக நாதன், எம். எல். ஏ., 25—4—1994.	ஆலங்குடி தொகுதியில் வெட்டன் விடுதியில் இருந்து வானக்கண்காடு வரை செல்லும் சாலையை சீரமைக்கும் பணியை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.	ஆலங்குடி தொகுதியில் வெட்டன்விடுதியில் இருந்து (வாணக்கண்காடு) கோட்டைக்காடு வழி கடுக்காகாடு வரை செல்லும் சாலை கி. மீ. 0/0—4/0 வரை மேம்பாடு செய்யும் பணி, பேருந்து தட சாலைத் திட்டத்தின் கீழ் செயலாக்கப்பட்டு 4—7—1994-ல் வேலை முடிக்கப்பட்டு விட்டது.

போக்குவரத்துத்துறை.

3	144/95	உடுக்குறியிட்ட வினா எண். 30163, துணை வினா திரு. கி. குழந்தைவேலு, எம். எல். ஏ., 20—4—1995.	புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகத்தின் மூலம் 1—10—1995 முதல் சொகுசுப் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

வருவாய்த்துறை.

4	65/94	உடுக்குறியிடாத வினா எண். 8383, திரு. எஸ். சண்முக நாதன், எம். எல். ஏ., 17—3—1994.	ஆலங்குடி தொகுதி, பெரியவாடி கிராமத்தைச் சேர்ந்த சண்முகநேரி குளத்தின் பாதிப் பகுதியைத் தனியார் ஆக்கிரமித்து விவசாயம் செய்வதை அரசு அறியுமா என்பது குறித்து.	ஆக்கிரமிப்புகள் அனைத்தும் நீக்கப்பட்டு விட்டது.

உள்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
5	88/95	மாநில ஆயத்தீர்வை, தீயணைப்புத்துறை மற்றும் காவல்துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சரின் பதிலுரை. 10—4—1995.	தஞ்சாவூர் தீயணைப்புக் கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு நாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்டு நாகப்பட்டினம் தீயணைப்புக் கோட்டம் அமைக்கப்படுமா என்பது குறித்து.	21—7—1995 நாளிட்ட உள்துறை அரசாணை எண். 1099-இல் தஞ்சாவூர் தீயணைப்புக் கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்டு தஞ்சாவூர் தீயணைப்புக் கோட்டமும், நாகப்பட்டினத்தை தலைமையிடமாகக் கொண்ட காயிதேமில்லத் தீயணைப்பு கோட்டமும் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டு உள்ளன.

ஊரக வளர்ச்சித்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
6	52/94	உடுக்குறியிடாத வினா எண். 12408, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 17—3—1994.	பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வெள்ளாளத் தெருவிற்கு 1992-93-ல் மாவாவத்திற்கு தகரக் கொட்டகை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி வெள்ளாளத் தெருவிற்கு மாயனத்திற்கு தகரக் கொட்டகை அமைக்கும் பணி 20,000 ரூபாய் மதிப்பீட்டில் தற்போது நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப்படும்.
7	69/94	உடுக்குறியிடாத வினா எண். 12282, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 17—3—1994.	பேராவூரணித் தொகுதி, பின்னவாசல் ஊராட்சி மெயின்ரோடு, புதுநகருக்கு தெரு விளக்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	பேராவூரணி தொகுதி, பின்னவாசல் ஊராட்சி புதுநகருக்கு தெரு விளக்கு அமைக்க 27—6—1993-ல் ரூ. 13,927 மில்லியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் செங்கமலம் உதவி மின் பொறியாளர், 19—8—1995 நாளிட்டக் கடிதத்தின்படி மேற்கூறிய புதுநகருக்கு 5 தெரு விளக்குகள் அமைக்க மேலும் ரூ. 66,632 கேட்கப்பட்டு உள்ளது. தக்க அனுமதி பெற்று, கேட்கப்பட்ட மேற்கூறிய தொகை செலுத்தி, மின் வசதி செய்து தரப்படும் என்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.
8	80/94	உடுக்குறியிடாத வினா எண். 12408, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 17—3—1994.	பேராவூரணி ஒன்றியம், வெள்ளாளர் தெருவிற்கு மாயனத்திற்கு தகரக் கொட்டகை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி வெள்ளாளத் தெருவிற்கு மாயனத்திற்கு தகரக் கொட்டகை அமைக்கும் பணி 20,000 ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

எரிசக்தித்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
	480/93	உடுக்குறியிடாத வினா எண். 7135, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 23—4—1993.	தஞ்சாவூர் மாவட்டம். சேதுபாவா சத்திரம் ஒன்றியம். நடுவிக்குறிச்சி தெற்கு ஆதி திராவிடர்களுக்கு மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு போட்டுத் தர அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	தஞ்சாவூர் மாவட்டம். சேதுபாவா சத்திரம் ஒன்றியம் (தெற்கு) நடுவிக்குறிச்சியில் 29—1—1994 அன்று 14 தெரு விளக்குகள் மின் இணைப்பு தரப்பட்டுள்ளன.
10	51/94	உடுக்குறியிடாத வினா எண். 13351, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 17—3—1994.	பேராவூரணி, சேதுபாவா சத்திரம், பூவாங்கொல்லைக்கும், குளக்குப் மாந்தோப்புக்கும் தெரு விளக்கு அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	மேற்கண்ட பகுதிகளில் 12 தெரு விளக்குகள் அமைக்க ரூபாய் 1,24,895-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இந்தத் தொகையினை செலுத்த தாமாறு சேதுபாவா சத்திரம் ஒன்றிய ஆணையருக்கு 19—8—1995-ல் தெரிவிக்கப் பட்டது. தொகை ஆணையரால் 21—8—1995 செலுத்தப்பட்டு. 12 தெரு விளக்குகளுக்கும் 4—9—1995-ல் மின் இணைப்பு வழங்கப்பட்டது.
11	56/94	உடுக்குறியிடாத வினா எண் 13352. திரு. ஆர். சிங்காரம். எம்.எல்.ஏ. 17—3—1994.	பேராவூரணி தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சிக்கு பிரித்தக்காட்டிற்கும், தாண்டா மரைக்காட்டிற்கும் 1992-93-ல் தெரு விளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	மேற்கண்ட பகுதிகளில் 7 தெரு விளக்குகளுக்கு 4—8—1994-ல் மின் இணைப்பு வழங்கப் பட்டு விட்டது. மேலும் நிலுவையில் தெரு விளக்குகள் அமைக்கக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் இல்லை.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
12	649/93	உடுக்குறியிடாத வினா எண். 12971. திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 26—10—1993.	பேராவூரணி தொகுதி, இடையாத்தி ஊராட்சி, வேலம்பட்டியில் ஒரு பாலர் பள்ளி தொடங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	பேராவூரணி தொகுதி, இடையாத்தி ஊராட்சி, வேலம்பட்டியிலும். இடையாத்தி ஆதி திராவிடர்களுக்கும் ஒரு பாலர் பள்ளி உடனடியாக தொடங்கி, செயல்பட வேண்டும் என்று மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலருக்கு 29—9—1995 அன்று அறிவுரை வழங்கப்பட்டு விட்டதாகவும், மேற்படி மையம் உடனடியாக செயல்படத் தொடங்கிவிடும் என்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார்.
13	650/93	உடுக்குறியிடாத வினா எண். 12972, திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 26—10—1993.	பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி ஆதி திராவிடர்களுக்கு பால்வாடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	

பொதுப்பணித் துறை

(1)	(2)	(3)	(4)	(5)
14	146-94	உடுக்குறியிடாத எண். 12236/திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ. 6-4-1994.	தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், கீழக்குறிச்சியிலிருந்து வட்சேரிக்குச் செல்லும் நெடுஞ்சாலைத் துறை சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள கீழக்குறிச்சி கன்னியாக்குறிச்சி சாலை கி.மீ. 0/0-11/6 வரை நெடுஞ்சாலைத் துறையில் பராமரிப்பிலுள்ள இரு மாவட்ட சாலையாகும். இதில் கி.மீ. 0/0-2/0 மற்றும் 4/0-5/0 ஆகிய 3 கி.மீ. பகுதிகள் தார்ச்சாலையாகவும் எஞ்சியுள்ள கி.மீ. 2/0-4/0, 5/0-5/?, 0/0-7/2 மற்றும் 11/0-11/6 வரையுள்ள 3.00 கி.மீ. தற்தள சாலையாகவும் உள்ளது. இச் சாலைப் பகுதியைத் தார்ச்சாலையாக மேம்பாடு செய்யும் பணியை கடந்த ஆண்டு 1993-94-ல் ரூ. 5/70 இலட்சங்கள் மதிப்பீட்டில் திட்டம் சாரா பணிகளில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடை பெறுகின்றன.
15	159-94	உடுக்குறியிடாத எண். 13759/திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 6-4-1994.	பட்டுக்கோட்டை ஒன்றியம், பழஞ்சூர் கிராமம் வழி செல்லும் வாய்க்காலை சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து.	பட்டுக்கோட்டை ஒன்றியம், பழஞ்சூர் கிராமம் வழி செல்லும் வாய்க்காலைச் சீர்செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. வருகிற நிதியாண்டில் ஒதுக்கப்படும் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் வாய்க்காலைச் சீர்செய்ய தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்துத் துறை

16	69/95	உடுக்குறியிட்ட வினா எண். 37286 / துணை வினா திரு. கே. பாலகப்பிரமணியன் எம்.எல்.ஏ., 5—4—1995.	பட்டுக்கோட்டைக்கு சென்னையில் இருந்து இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட 332, 336ஏ திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து சேவைகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா எனபது குறித்து.	தற்போது சென்னை— பட்டுக்கோட்டை 332 எண் வழித் தடத்தில் ஒரு சொகுசுப் பேருந்து இரண்டு நடைகளுடன் இயக்கப்பட்டு வருகிறது. தட எண் 332ஏவில் இரண்டு பேருந்துகள் 4 நடைகளுடன் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த இரு தடங்களில் நவம்பர் 1994 மற்றும் டிசம்பர் 1994 முதல் இரண்டு புதிய பேருந்துகள் முறையே இயக்கப்பட்டு வருகின்றன. இவைத் தவிர, பட்டுக்கோட்டை வழியாக சென்னை—ஓத்தநாடு தடத்தில் 336ஏ 2 நடைகளுடன் இயக்கப்பட்டு வருகின்றது.

வேளாண்மைத் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
17	676/93	உடுக்குறியிடாத வினா எண் 15627. திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 26—1—1993.	பேராவூரணி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திற்கு சட்டிட கட்டிக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா எனபது குறித்து.	உலக வங்கி நிதி உதவியுடன் 10 வேளாண் இணை இயக்குநர் அலுவலகங்களும், 50 வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களும் கட்ட திட்டம் உள்ளது. அதில் 1993-94 ஆம் நிதி ஆண்டில் 5 வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங்களும் கட்ட நிலங்கள் கையகப் படுத்தி கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 5 வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகங் களும் மற்றும் 27 வேளாண்மை உதவி இயக்கு நர் அலுவலகங்களும் கட்ட 1994-95 ஆம் ஆண்டில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும். அதில் பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகமும் அடங்கும். 1994 ஏப்ரல் மாதத்தில் பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகக் கட்டிடம் கட்ட நிலத்தை பொதுப்பணித்துறையிடம் ஒப் படைக்கப்படும். எனவே, 1994-95 ஆம் ஆண்டில், பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், நாட்டாணிகோட்டை கிராமத்தில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் (ஆ.தி.ந. 4) துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
18	354/94	உடுக்குறியிட்ட வினா எண் 19419, திருமதி க. மரியாய் உல் ஆசியா, எம்.எல்.ஏ., 9—11—1994.	அரவக்குறிச்சியில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கொத்தக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?	அரசாணை (நிலை) எண் 63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், நாள் 29—3—1995ல் 1994-95 ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டம் அரவக்குறிச்சி ஆதி திராவிட மாணவர் விடுதிக் கட்டிடம் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறை.

19	357/94	உடுக்குறியிட்ட வினா எண் 14707, திரு. கு. ரத்தினவேல், எம்.எல்.ஏ., 10—11—1994.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திரு வெறும்பூர் அரசு கலைக் கல்லூரியை வரும் கல்வி ஆண்டு முதல் மகளிர் கல்லூரியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதுனும் உள்ளதா என்பது குறித்து.	இக்கல்லூரியை மகளிர் கல்லூரியாக மாற்ற வேண்டாமென அரசு முடிவெடுத்துள்ளது.

(1)	(2)	(3)	(4)	(5)
20	172/95	உடுக்குறியிட்ட வினா எண் 38165, திரு. எஸ். ஆர். சிவபதி, எம்.எல்.ஏ., நாள் 26—4—1995.	தொடியம் தெ குறி, தாத்தையங் கார்பேட்டையில் நெசவாளர்களின் நலன் கருதி சாயத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	1993-94 ஆம் ஆண்டிற்கு பகுதி 2 திட்டத்தின் கீழ் தொடியம் தொகுதி, தாத்தையங்கார் பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் சாயச்சாலை அமைப்பதற்காக அரசு ஆணை எண் 173, கைத்தறிகள், கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் (டி.2) துறை, நாள் 6—7—1993ன்படி ரூ. 4.275 லட்சம் அரசு அனுமதி வழங்கியது

சாயச் சாலைக்கான திட்டத் தொகை கீழ் வருமாறு :

	(ரூபாய் லட்சத்தில்)
1. கட்டிட மதிப்பீட்டுத் தொகை	1.80
2. வாகனம் வாங்குவதற்காக (3 சக்கர வண்டி.) ..	1.80
3. ஆழ்குழாய் கிணறு மற்றும் தொழிலன் தொட்டி ..	0.75
4. சாயத் தொட்டி மற்றும் கொதிகலன் தொட்டி ..	0.25
5. சாய அடுப்பு ..	0.06
6. மரத் தொட்டி ..	0.06
7. தேவையான இதர வசதிகள்	0.10
8. உத்தேச விலை உயர்வு ..	0.40
மொத்தம் ..	4.42
(அல்லது)	4.50

அரசு அனுமதித்த தொகை ரூ. 4.275 லட்சமும், தாத்தையங்கார்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் தனது சொந்த நிதியில் இருந்து ரூ. 0.225 லட்சம் ஆக மொத்தம் ரூ. 4.50 லட்சம் செலவில் தாத்தையங்காபேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சஙகத்தில் சாயச்சாலை சம்பந்தப்பட்ட கட்டிடப் பணிகளும் மற்றும் அனைத்து பணிகளும் முடிவடைந்த மேற்படி சாயச்சாலையில் கடந்த 29—4—1995 முதல் நூல் சலவை செய்தல் மற்றும் சாயமிடுதல் பணிகள் துவங்கி, செயல்பெற்று வருகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
21	108/91	உடுக்குறியிட்ட வினா எண். 319, திரு. பாப்பா சுந்தரம், எம்.எல்.ஏ., 16—9—1991.	குளித்தலை பேரூராட்சியை நகராட்சி ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.	திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றியமைப்பது குறித்து இப்பேரூராட்சி மன்றம் மற்றும் பொதுமக்களின் கருத்தினை தெரிவிக்குமாறு கேட்டு முதல்நிலை அறிவிக்கை ஒன்று தமிழ்நாடு அரசிதழில் மற்றும் திருச்சி மாவட்ட அரசிதழில் வெளியிட அரசாணை எண். 167, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 7-7-93-ல் ஆணையிடப்பட்டுள்ளது.
22	150/93	உடுக்குறியிட்ட வினா எண். 9779, துணை வினா திரு. ஏ. தா. பொன்னுவேலு, எம்.எல்.ஏ., 31—3—1993.	வரகூர் தொகுதியிலுள்ள அரியலூரிலிருந்து திம்மூர் சின்னக்குடி மற்றும் கடலூர் போன்ற இடங்களுக்குச் செல்லும் சாலையில் செல்வதற்கு சாலை சரியில்லாததால் சீர் செய்ய மறு பரிசீலனை செய்யப்படுமா என்பது குறித்து.	அரியலூரிலிருந்த திம்மூர், சின்னக்குடி மற்றும் கடலூர் செல்லும் சாலை தடத்தில் கீழ்க்கண்ட நான்கு இதர மாவட்டச் சாலைகள் அமைந்துள்ளன— (1) ஆலத்தூர்-சாரை-கொளக்காநத்தம் சாலை கி.மீ. 19/8— 29/8. இச்சாலையில் 10 கி.மீ. நீளமுள்ளது. இச்சாலையில் 1991-92, 1992-93 ஆகிய ஆண்டுகளில் ஆண்டு பராமரிப்பு நிதியைக் கொண்டு 2.8 கி.மீ. சாலைகளில் தார்தளம் புதுப்பிக்க தோராயமாக ரூ.13.00 இலட்சம் தேவைப்படுகிறது; கடலூர் சாலை கி.மீ. 0/0—3/0 சாலைக்கு தார் தளம் புதுப்பிக்க தோராயமாக ரூ. 6.00 இலட்சமும் கடலூர் திம்மூர் சாலை கி.மீ. 11/0—15/0 பகுதிக்கு ரூ. 9.00 இலட்சமும், கடலூர் சின்னக்குடி வழி திம்மூர் சாலை கி.மீ. 1/2—7/0 பகுதிக்கு ரூ. 6.00 இலட்சமும் தேவைப்படுகிறது. மேற்கூறிய சாலைகள் அனைத்தும் ஆண்டு பராமரிப்பு நிதியிலிருந்தான் புதுப்பிக்கப்பட வேண்டும். ஆண்டு பராமரிப்பு நிதி குறைந்த அளவில் அரசால் ஒதுக்கீடு செய்யப்படுவதால் இச்சாலைகளை உடனடியாக சீர் செய்ய இயலாது. இருப்பினும், இச்சாலைகளில் ஏற்படும் பழுதுகளை அவ்வப்போது பராமரிப்பு நிதியைக் கொண்டு சீர் செய்யப்பட்டு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் நன்கு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

பொதுப்பணித் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
23	288/93	உடுக்குறியிட்ட வினா எண். 9778, துணை வினா திரு. ஏ. தா. பொன்னுவேலு, எம்.எல்.ஏ., 15—4—1993.	திருமாந்துரை - கீரனூருக்கும் இடையில் அமைக்கும் பாலத்தை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பது குறித்து.	உறுதிமொழியில் குறிப்பிட்டுள்ள பாலம் திருச்சி மாவட்டம், வரகூர் தொகுதி, வேட்பூர் ஒன்றியத்தில் கீரனூர் தேசிய நெடுஞ்சாலை 45-ல் 1/4 கி.மீ.ல் ரூ. 4.40 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு அரசாணை நிலை எண் 1648, பொதுப்பணித் (எச்.எஸ்.1) துறை நாள் 25—11—1993ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
24	112/94	சட்டமன்ற வினா எண். 9817. (உடுக்குறியிட்டது) ஆ. அறிவுநம்பி. சட்டமன்ற உறுப்பினர்.	திருச்சி மாவட்டம். குளித்தலை தாலுகா கடலூர் ஒன்றியத்தில் கவரப்பட்டி கிராமத்தில் வெள்ளத் தடுப்பு சுவர் கட்டும் பணி அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?	சிறுத்தாறு என்ற காட்டாறில் திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம். கடலூர் ஒன்றியத்தில் துவரப்பட்டி கிராமம் பாலவிடுதி கிராமம். இணைப்புச் சாலையை வெள்ளத்தினால் உடைப்பு உண்டாகி சேதம் ஏற்பட்டுள்ளது. இக்கிராம சாலையும் பிறுக்காறும் குறுக்கிடும் இடத்தில் 54 மீட்டர் நீளத்திற்கு உடைப்பு ஏற்பட்டுள்ளது. இச்சேதத்தை சீர் செய்ய உத்தேச மதிப்பீடு ரூ. 65.000 பராமரிப்பு தலைப்பின் கீழ்
			செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெரியாறு என்ற மற்றொரு காட்டாறு கவரப்பட்டி கிராமத்திற்கு மேற்கே 3 கி.மீ. தூரத்திற்கு அப்பால் ஓடுகிறது. வெள்ளத்தால் சிக்கம்பட்டி வடக்கிகுளம் என்ற இடத்தில் இந்த ஆறு சேதத்தை விளைவித்துள்ளது எனவே. உடைப்படுத்த இடங்களில் தடுப்புச்சுவர் கட்ட உத்தேசமாக ரூ. 1 லட்சமும். பராமரிப்புத் தலைப்பின் கீழ் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. சிறுக்காறு என்ற காட்டாற்றில் கவரப்பட்டி பாலவிடுதி கிராம இணைப்புச் சாலையில் கி.மீ. 1/6 சிறுக்காறு குறுக்கிடும் பகுதியாகும். இதில் 40 மீட்டர் நீளத்திற்கு தாம்போக்கி கடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 60.000 செலவில் முடிக்கப்பட்டது.
25	115/94	கவனஈர்ப்பு அறிவிப்பு எண். 49. திரு. ஆர். தங்கராசு எம்.எல்.ஏ.. 23— 2— 1994.	ஆண்டிமடம் தொகுதி. பிச்சநத்தரை முதல் அரியலூர் சாலை வெள்ளத்தால் பழுதடைந்து இன்று வரை அச்சாலை செப்பனிடப் படாதது குறித்து.	இச்சாலையின் சுமயான பகுதி அரியலூர்-செந்துறை சாலை என்பதாகும். இது 20.60 கி.மீ. நீளமுள்ள ஒரு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் கடந்த மூன்று ஆண்டுகளில் 10. 20 கி.மீ. நீளம் சீர் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கி.மீ. 0/0— 1/0 பகுதி சீர் செய்யப்பட்டு வருகிறது.
26	183/94	உடுக்குறியிட்ட வினா எண். 21063. துணை வினா— டாக்டர் ஜி. ஆர். மாலை. எம்.எல்.ஏ. 8— 4—1994.	திருச்சி மாவட்டம் உறையூர் தொகுதியில் உய்யக்கொண்டான் வாய்க்காலையும் சீர் செய்வது சம்பந்தமாக.	திருச்சி மாவட்டம் உறையூர் தொகுதியிலுள்ள உய்யக்கொண்டான் கால்வாய் நல்லமுறையில் சீர்செய்யப்பட்டுள்ளது.

பாசனத்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
27	115/94	உடுக்குறியிட்ட வினா எண். 24636. துணை வினா— டாக்டர் கு. மணிமேகலை. எம்.எல்.ஏ.. 28—3—1994.	திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருமானூர் வழியாக கும்பகோணத்தில் இருந்து திருச்சிராப்பள்ளிக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட இரண்டு பேருந்துகளையும் மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	சோழன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து திரு. இன்பமலை போக்குவரத்துக் கழகத்திற்கு மாறுதலிசெய்யப்பட்ட இருபேருந்துகள் மூலம் திருச்சி-கும்பகோணம் (வழி) கால்குடி புள்ளம்பாடி திருமானூர் திருவையாறு வழித்தடத்தில் 6 தவி நடைகள் இயக்கப்பட்டு வந்தன. இத்தடத்தில் நீளம் 104.1 கி.மீ.

போக்குவரத்துத் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
				ஆகும். இவ்வழித்தடத்தில் உள்ள சாலைகள் மிக்குறுகலாகவும் சாலைகள் பழுதடைந்தும் இருப்பதால் இப்பேருந்துகளின் பயண நேரம் சுமார் 4 மணி 30 நிமிடங்கள் ஆகிறது. ஆனால் கும்பகோணம்-திருச்சி (வழி) தஞ்சாவூர் நேரடி வழித்தடம் 101.0 கி.மீ. மட்டுமே உள்ளது. இதற்கு பயண நேரம் 3 மணி நேரம் மட்டுமே ஆகிறது. ஆகவே, நேரடியாக பயணிகள் திருச்சி-கும்பகோணம் (வழி) லால்குடி, புள்ளம்பாடி, திருமழுபாடி, புள்ளம்பாடி, லால்குடி பகுதிமக்களின் தினசரி தொடர்பு தஞ்சாவூர் மற்றும் திருச்சிக்குத்தான் உள்ளது. அதனால் இப்பேருந்து இரண்டையும் கிழக்கண்டவாறு மாற்றி (பிரித்து) இயக்கப்பட்டு வருகின்றன. (1) அரியலூர்-கும்பகோணம் 4 தனி நடைகள் (வழி) திருமானூர் திருவையாறு திருவையாறு-கும்பகோணம் 4 தனி நடைகள்—16 பேருந்து. (2) தஞ்சாவூர்-திருச்சி 6 தனிநடைகள் (வழி) திருமானூர் திருமழுப்பாடி. புள்ளம்பாடி. —26 பேருந்துகள். இப்படி பிரித்து இயக்கப்படுவதால் திருச்சி-கும்பகோணம் (வழி) லால்குடி புள்ளம்பாடி. திருமானூர் வழித்தடத்தில் முன்பு இயக்கப்பட்டு வந்த 6 தனி நடைகளும் தற்போது மேற்கூறியவாறு பிரித்து இயக்கப்பட்டு 6 தனி நடைகளும் புராமரிக்கப்படுகின்றன. திருவையாறு-கும்பகோணம் தடத்தில் இரு கூடுதல் நடைகளும் இயக்கப்படுகின்றன.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
28	113/95.	உடுக்குறியிடாத வினா எண். 34460. திருமதி கே.மரியம் உல் ஆயியா. எம்.எல்.ஏ.. 17—4—1995.	அரவக்குறிச்சி தொகுதி. புன்னம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா எனபது குறித்து.	அரவக்குறிச்சி தொகுதி. புன்னம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட 1995-96 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் ஆணை பிறப்பிக்கப் பட்டது.

வருவாய்த் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
29	337/91	உடுக்குறியிட்ட வினா எண் 219. திரு. மா. சின்னசாமி. எம்.எல்.ஏ.. 1—10—1991.	திருச்சி மாவட்டத்தில், திருச்சி. கரூர். ஆகிய வருவாய் வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.	திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரித்து புதிய மாவட்டம் உருவாக்க அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவிடம் திருச்சி மற்றும் கரூர் வட்டப் பிரிவினை தொடர்பான உறுதி மொழி கருத்துரைக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. குழுவின் அறிக்கைக் கிடைக்கப் பெற்றதும் மாவட்ட பிரிவினையுடன் வட்ட பிரிவினைக் குறித்தும் அரசு ஆராய்ந்து முடிவெடுக்கும்.
30	616/93	உடுக்குறியிடாத வினா எண் 16134. திரு. ஆர். தங்கராசு எம்.எல்.ஏ.. 26—10—1993.	ஆண்டிமடம் தொகுதி செந்துரையைத் தனித் தாலுக்காவாப் பிரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பது குறித்து.	திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஆண்டிமடம் தொகுதி செந்துரையைத் தலைமையாகக் கொண்டு புதிய வட்டம் அமைப்பது தொடர்பான பொருளை திருச்சிராப்பள்ளி மாவட்ட

பிரிவினை தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள உயர்மட்ட அதிகாரிகள் அடங்கிய வல்லுநர் குழுவின் முன் வைத்து அதன் அறிக்கையினை திருச்சிராப்பள்ளி மாவட்ட பிரிவினை தொடர்பான அறிக்கையுடன் அரசுக்கு அளிக்கும்படி வல்லுநர் குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வல்லுநர் குழுவின் அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அரசு அதனை ஆராய்ந்து தகுந்த முடிவெடுக்கும்.

(1)	(2)	(3)	(4)	(5)
11	291/94	கவனஈர்ப்பு விதி 55-ன் அறிவிப்பு திரு. கே. கே. சின்னப்பன். எம்.எல்.ஏ.. 19-4-94.	திருச்சி மாவட்டம், உடையாறபுதூரில் உள்ள ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நீர்வரி, நிலவரியை ரத்து செய்யவும், விவசாயக் கூடங்களை நீண்டகால கடன்களாக மாற்றிக் கொடுக்கவும் அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்படவேண்டிய கூட்டுறவுக் கடன்களை மாற்ற அனைவரி சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்பட்டார். 1403 ஆம் பசலி ஆண்டில் நிலுவரித் தொகை வசூலிக்கப்படவில்லை. ரூ. 8.02 லட்சம் வரிவசூல் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
32	135-93	உடுக்குறியிட்ட வினா எண். 13840 துணை வினா டாக்டர் ஜி. ஆர். மாலா, எம்.எல்.ஏ, 23—3—93.	திருச்சி நகரத்தில் வேளாண்மை பொறியியல் துறையில் 12 அலுவலகங்களில் 2 அலுவலகங்கள் மட்டுமே அரசின் சொந்தக் கட்டிடம். மீதியுள்ள அலுவலகங்கள் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருவதால் இவ்வலுவலகங்களுக்கு அரசு கட்டிடம் கட்டித்தர ஆவன செய்யுமாறு என்பது குறித்து.	உலக வங்கி நிதி உதவியுடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருச்சியில் வேளாண்மை துறைக்கு பல மாடிக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தில் திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் வேளாண்மைத் துறை அலுவலகங்களும் மற்றும் அதனைச் சார்ந்த துறை அலுவலகங்களும் (அதாவது வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களும் சேர்த்து) ஒரே இடத்தில் இயங்கும் இக் கட்டிடப் பணி, இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டப் பணிக்கு சுமார் ரூ. 40.00 இலட்சம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டு, பணி நடைபெற்று வருகின்றது. இரண்டாம் கட்டப் பணிக்காக ரூ. 72.33 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு ஒன்றை வேளாண்மைத் துறை ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார். சம்பந்தப்பட்ட கோப்பு மாண்புமிகு வேளாண்மை மற்றும் நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒப்புதல் வேண்டி 10—2—95 அன்று சுற்றனுப்பப் பட்டுள்ளது.

சென்னை மாவட்டம்.

உள் துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
33	104/95	போக்குவரத்துத் துறை (ம) வனத்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு அமைச்சரின் பதிலுரை. 17—4—95	தேனாம்பேட்டை டி. எம். எஸ். அலுவலகத்திலிருந்து நந்தனம் தெற்கு உஸ்மான் சாலை வரையிலும் நான்கு வழிப்பாதை விரிவு படுத்த அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.	அரசு ஆணை எண். 1192, உள் (போ.வ.5) துறை, நாள் 7—8—95-ல் சென்னை அண்ணா சாலையில் ஏற்கனவே நடைமுறையில் உள்ள நான்கு வழிப்பாதை போக்குவரத்து முறையினை டி.எம்.எஸ். அலுவலகத்திலிருந்து உஸ்மான் சாலை சந்திப்பு வரை நீட்டித்து ஆணை பிறப்பித்துள்ளது.

எரிசக்தித் துறை.

34	331/93	உடுக்குறியிட்ட வினா எண். 9540 திரு. எம்.கே. பாலன், எம்.எல்.ஏ. 16—4—93.	சைதாப்பேட்டை பகுதியில் மின்சார கம்பங்களை அகற்றி கேபிள் மூலம் மின்சாரம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது குறித்து.	(1) ஆம் சைதாப்பேட்டை பகுதியில் மின்சார மேல் நிலை கம்பிகளை அகற்றி நிலத்தடியில் கேபிள் போடும் திட்டம் குறித்து அறிவிக்கப்பட்டு வருகிறது.

செய்தி மற்றும் சுற்றுலாத் துறை.

(2) இப்பகுதியில் மின்சார கம்பிகளை மாற்றி நிலத்தடியில் கேபிள் போடும் திட்டம் கீழ்க் கண்ட பகுதிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது.

1. கருணாநிதி தெரு
2. வண்டிக்காரன் மற்றும் திருவிதி அம்மன் தெரு.
3. முதல் குறுக்குத் தெரு, மேற்கு (I.I.T. நகர்.
4. இரண்டாவது குறுக்குத் தெரு, மேற்கு, I.I.T. நகர்.
5. பாலகிருஷ்ணன் தெரு.
6. பழைய மாம்பலம் ரோடு.

35	191/95	சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் துணை வினா 2—5—1995.	மெரினா கடற்கரையில் மின் விளையாட்டு காட்சியகத்தை அமைக்க அரசு முன்வருமா என்பது குறித்து.	இயக்குநர் சுற்றுலாத் துறை அவர்கள் இவ்வுறுதி மொழி தொடர்பாக மின்வதை தடையில்லா இயக்குநரின் கருத்தை எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார். சுற்றுலாத் துறை இயக்குநரின் அறிக்கை அரசுக்கு கிடைக்கப்பெற்றவுடன் ஆய்வு செய்து அரசு முடிவு எடுக்கும்.

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

36	405/90	உடுக்குறியிடாத வினா எண். 5411 திரு. வீ. தமிழ்மணி, எம்.எல்.ஏ., 24—4—90.	நெருப்பூரில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித் தர அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து.	செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், நெருப்பூரில் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும் நடுநிலைப் பள்ளிக்கு ஹேவேர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1993—94 ஆம் நிதியாண்டில் ரூ. 1,20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு கூடுதல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மேற்படி பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது மேற்படி கட்டிடத்தில் வகுப்புக்கள் நடைபெற்று வருகிறது.

(1)	(2)	(3)	(4)	(5)
37	501/95	உடுக்குறியிடாத வினா எண். 619,7 திரு. டி. சுகர்சனம், எம்.எல்.ஏ., 23—4— 93	செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், பூந்தமல்லி மேல்மாநகரிலுள்ள ஆதி திராவிடர் நலத்துறை நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது குறித்து.	செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், ஸ்ரீபெரும் புதூர் வட்டம், பூந்தமல்லி மேல் மாநகரிலுள்ள ஆதிதிராவிடர் நலத்துறைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல் குறித்து ஜூஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1993— 94 ஆம் நிதியாண்டில் ரூ. 1,20,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு கூடுதல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மேற்படி பள்ளித் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டு தற்போது மேற்படி கட்டிடத்தில் வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

எரிசக்தித் துறை

38	161/92	உடுக்குறியிட்ட வினா எண். 1608, துணை வினா திரு. ஜி. காளன், எம்.எல்.ஏ., 24— 3 — 92.	அம்பத்தூரில் கள்ளிக்குப்பம் ரோடு, பூம்புகார் நகர், கல்யாணபுரம் ஆகிய பகுதிகளில் குறிப்பிட்ட கால வரையறைக்குள் புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைக்க உத்தேசம் ஏதாவது இருக்கிறதா என்பது குறித்து.	அம்பத்தூரில் கள்ளிக்குப்பம் ரோடு எல்ற இடத்தில் 100 கே.வி.ஏ. திறன் கொண்ட புதிய நிர்மாண மின்மாற்றி ஒன்று நிறுவப்பட்டு 24— 12— 92 முதல் செயல்பட்டு வருகிறது. இதனால் கள்ளிக்குப்பம் ரோடு, பூம்புகார் நகர் மற்றும் கல்யாணபுரம் ஆகிய பகுதிகளில் மின் அழுத்தம் இப்போது திருப்திகரமாக உள்ளது.

கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த்துறை.

(1)	(2)	(3)	(4)	(5)
39	195/95	கைத்தறியும் துணித்தொழிலும் குறித்த மானியக்கோரிக்கை 4— 5— 95.	காஞ்புரத்தில் கைத்தறி வார விழா நடத்துவது குறித்து.	காஞ்சிபுரத்தில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15 முதல் 21-ந் தேதி முடிய 7 நாட்கள், கைத்தறி வார விழா நடத்துவதற்கு அரசு (நிலை) ஆணை எண். 142, நாள் 7— 7— 95-ல் உத்தரவிட்டுள்ளது. மேலும், மேற்படி கைத்தறி வார விழாவில் விற்பனை செய்யப்படும் கைத்தறி ஆடைகளுக்கு 20 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் துறை.

40	154/95	உடுக்குறியிட்ட வினா எண். 35566, துணை வினா திருமதி டி. சக்குபாய் தேவராஜ், எம்.எல்.ஏ. ,24— 4— 95.	திருவள்ளூரிலிருந்து வேலூர் வரையில் ஜே.ஜே.டி.பி. பேருந்து இயக்கப்படுவதில் அதை கூடுதலாக இயக்கப் படுமா என்பது குறித்து.	திருவள்ளூர்-வேலூர் இடைப்பட்ட தூரம் 119.0 கி.மீ. ஆகும். புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் 250 கி.மீ.க்கு மேல் அண்டை மாநிலங்களுக்கே பேருந்து இயக்கங்களை மேற்கொண்டுள்ளது. எனவே புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் மூலம் மேற்படி தடம் இயக்க சாத்தியக் கூறு இல்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உறுதிமொழிக் குழு முன்பு 12— 9— 95-ல் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக்கழக பேருந்து திருவள்ளூர்- வேலூர் வழித் தடத்தில் 4— 10— 95 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

இணைப்பு— 2.

அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப் பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல்:—

ஆண்டு.	அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள்.	நிறைவேற்றப்பெற்ற தாக கருதப்பெற்றவை.	நிலுவையில் உள்ளவை.
(1)	(2)	(3)	(4)
1983	335	334	1
1984	274	274	—
1985	461	458	3
1986	681	677	4
1987	635	621	14
1989	390	383	7
1990	548	534	14
1991	376	360	14
1992	480	444	36
1993	747	671	76
1994	360	228	132
1995	197	13	184
			487

(அக்டோபர் வரை)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–3:

நிலுவையிலுள்ள உறுதிமொழிகள் குறித்த துறை வாரியான மற்றும் ஆண்டு வாரியான பட்டியல்:

வரிசை எண்.	துறை	1983	1984	1985	1986	1987	1988	1990	1991	1992	1993	1994	1995	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)	(14)	(15)
1	ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	..	..	..	..	..	..	1	1	5	2	7	9	25
2	உள்துறை	..	..	..	..	..	..	..	1	...	4	3	22	30
3	ஊரக வளர்ச்சித் துறை	...	..	..	..	1	..	1	1	2	5	7	9	26
4	கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை	...	..	..	..	1	..	..	1	3	3	12	6	26
5	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை	...	..	..	..	..	...	1	..	3	5	2	8	19
6	கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை	..	..	..	..	..	..	..	..	...	..	1	3	4
7	கைத்தறி, கைவினைப்பொருட்கள் துணி நூல் மற்றும் கதர்த்துறை	...	..	..	..	..	..	..	..	..	2	..	9	11
8	சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	...	..	..	..	..	..	..	..	...	2	5	4	11
9	சட்டத் துறை	..	..	..	..	..	..	..	...	..	..	..	1	1
10	சட்டமன்றப் பேரவைச் செயலகம்	...	..	..	..	..	..	..	...	...	...	...	...	...
11	சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை	...	..	..	..	..	..	..	..	...	...	4	5	9 18
12	செய்தி மற்றும் சுற்றுலாத் துறை	...	..	..	..	2	1	1	1	2	1	3	7	
13	தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை	..	..	..	..	..	..	..	..	...	...	..	1	1
14	திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	..	..	..	..	..	..	..	..	...	..	..	...	...
15	தொழில் துறை	..	..	..	..	1	..	...	2	1	...	1	3	8
16	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	..	..	..	..	..	..	..	..	..	2	3	1	6
17	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	...	..	..	2	3	1	2	1	5	15	5	11	42

18	நிதித் துறை	...	...	...	—	..	—	—	...	...	...	...	2	2
19	பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை	..	..	...	..	..	—	—	..	..	..	...	..	...
20	பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறை	..	...	...	...	...	...	..	..	..	..	..	2	2
21	பொதுத் துறை	..	...	...	...	..	...	1	...	—	...	1	...	2
22	பொதுப்பணித் துறை	...	...	2	2	6	2	5	6	8	22	47	29	129
23	போக்குவரத்துத் துறை	..	..	..	...	...	—	1	...	...	2	8	17	28
24	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை	..	..	..	...	...	...	—	...	....	5	7	5	17
25	மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை	...	..	..	..	..	..	..	..	..	..	..	1	1
26	வணிகவரி மற்றும் அறநிலையத் துறை	1	..	..	..	..	..	..	..	1	...	3	5	10
27	வருவாய்த் துறை	...	..	1	..	..	1	1	2	4	2	9	8	28
28	விட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	..	..	..	..	..	1	...	..	1	2	1	4	9
29	வேளாண்மைத் துறை	..	...	..	..	..	..	—	...	1	2	2	9	14
30	எரிசக்தித் துறை	..	...	..	..	..	1	..	...	...	1	1	2	5
31	இறுதொழில் துறை	—	...	..	..	..	..	..	1	...	1	...	1	3
	மொத்தம்	1	..	3	4	14	7	14	16	36	76	132	184	487

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 4.

(அறிக்கை பத்தி 4)

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்.

நாள் (1)	குழுக்கூட்டம் நடைபெற்ற இடம். (2)
29—06—1995	.. சென்னை
24—07—1995	
25—07—1995	திருநெல்வேலி கூட்டபொம்மன்
26—07—1995	கன்னியாகுமரி
27—07—1995	சிதம்பரனார்
28—07—1995	
23—08—1995	
24—08—1995	புதுக்கோட்டை, திருச்சொற்பள்ளி, தஞ்சாவூர்
25—08—1995	
11—09—1995	சென்னை
12—09—1995	செங்கை-எம்.ஜி.ஆர்.
25—09—1995	நீலகிரி
26—09—1995	கோவை
27—09—1995	பெரியார்
04—10—1995	
05—10—1995	சென்னை
10—10—1995	திண்டுக்கல்-அண்ணா
11—10—1995	மதுரை
12—10—1995	காமராஜர்
13—10—1995	இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்.
25—10—1995	வட ஆற்காடு-அம்பேத்கார்.
26—10—1995	திருவண்ணாமலை-சம்புவராயர்
	விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார்.
02—11—1995	.. சென்னை.

இணைப்பு 5.

நிறைவேற்றப்பெற்ற/படித்து பதிவு செய்யப்பட்ட உறுதிமொழிகள்/சதவீதம்.

வ. எண்.	ஆண்டு.	நிலுவையாக உள்ள உறுதிமொழிகள் எண்ணிக்கை.			நிறைவேற்றப்பெற்ற/படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகள்.		
		ஆண்டுத் தொடக்கத்தில்.	மேலும் சேர்த்துக் கொள்ளப் பட்டவை.	மொத்தம்.	ஆண்டு இறுதியில்.	எண்ணிக்கை.	சதவீதம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	1989 ..	1,655	721	2,376	1,835	541	23
2	1990 ..	1,825	497	2,332	1,565	767	32.9
3	1991 ..	1,565	375	1,940	1,186	754	38.7
4	1992 ..	1,186	890	2,076	1,035	1,035	49.9
5	1993 ..	1,041	521	1,562	433	1,129	72.3
6	1994 ..	474	318	972	331	461	58
7	1995 ..	344	197	541	க	54	..

(அக்டோபர் வரை)

(க) ஆண்டு முடிவுறவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சத்யமேவ ஜெயதே
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்

அரசு உறுதிமொழிக் குழு

1995-96ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கையின் பிழையும், திருத்தமும்.

பக்கம்	பத்தி	வரி	பிழை	திருத்தம்
v	ii	1	நாட்கள	நாட்கள்
2	வரிசை எண். 8-ல் பத்தி-4	3	அரசிட்ம்	அரசிடம்
5	வரிசை எண். 17-ல் பத்தி-5	16	இயக்குநா	இயக்குநர்
5	வரிசை எண். 18-ல் பத்தி-5	4	மாவணவர்	மாணவர்
5	வரிசை எண். 19-ல் பத்தி-3	2	ரத்தினவேல	ரத்தினவேல்
6	வரிசை எண். 20-ல் பத்தி-5-ல் கினை பத்தி-3	4	சகசுத்தில்	சங்கத்தில்
8	வரிசை எண். 26-ல் பத்தி-5	1	திருச்சு	திருச்சி
8	வரிசை எண் 27-ன் தலைப்பு		பாக்குவரத்துத்துறை	போக்குவரத்துத் துறை
8	வரிசை எண். 27-ல் பத்தி-5	3	பேருந்துகள்	பேருந்துகள்
8	வரிசை எண். 27-ல் பத்தி-5-ல் கினை பத்தி-2	1	ப்ள்ளம்பாடி	பள்ளம்பாடி
10	வரிசை எண் 32-ல் பத்தி-5	12	பண	பணி
10	வரிசை எண். 32-ல் பத்தி-5	17	இலட்டம்	இலட்சம்
11	வரிசை எண். 34-ல் பத்தி-4	2	கம்பப்களை	கம்பங்களை

செ.சு.ஜானகிராமன்,
செயலாளர்.